<u>மகிளா நீதிமன்றம், கடலூர்</u>

அமர்வு வழக்கு எண் : **9/2021**

அரசுதரப்பு **1** -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரமசிவம் | வயது | 60 |
| தந்தை பெயர் | சின்னதம்பி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சிலம்பிமங்கலம் | சமயம் | 12.30 P.M |
| தாலூக்கா | புவனகிரி | தேதி | 18.07.2024 |
| மாவட்டம் | கடலூர் | | |

சட்டம் **44/1969**-ன் விதிமுறைகளின்படி சாட்சிக்கு **18.07.2024** -ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது. ( எதிரி ஆஜர் )

<u>பிரதம விசாரணை</u> - நான் தற்போது மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சிலம்பரசன் என்னுடைய மருமகன். ஆதிலட்சுமி என்னுடைய சம்மந்தி. எனக்கு 3 மகள்கள். என் மூத்த மகள் நந்தினியை சிலம்பரசனுக்கு திருமணம் செய்து கொடுத்தோம். இதற்கு முன்பு என் மகளும் ஆஜர் எதிரியும் காதலித்து வந்தார்கள் என்று தெரியவந்தபிறகு 7 மாதத்தில் அவர்களுக்கு 05.02.2020 அன்று திருமணம் செய்துவைத்தோம். இரண்டரை பவுன் நகை போட்டு சீர் சாமான்கள் வாங்கிகொடுத்து இருசக்கர வாகனமும் வாங்கி கொடுத்தோம். மாப்பிளை வீட்டில் அவருடைய அம்மா 10 பவுன் நகை மற்றும் ரூ.50,000 மும் வரசட்சனையாக கேட்டார்கள் 4 மாதம் கழித்து தரோம் என்று சொன்னேன். திருமணமாகி அவர்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள். அதற்கு பிறகு என் மகளும் மருமகனும் சென்னைக்கு வேலைக்கு சென்றுவிட்டார்கள். கொரோனா காலத்தில் வேலை இல்லாததால் ஊருக்கு வந்துவிட்டார்கள். அதற்கு பிறகு 15 நாட்கள் கழித்து எங்கள் வீட்டிற்கு வந்து 15 நாட்கள் தங்கினார்கள். அதற்கு முன்னாள் மாப்பிளையின் அம்மா நகை வரதட்சனையாக வேண்டும் என்றும், ரூ.50,000 பணம் வேண்டும் என்றும் கேட்டார். என் மகளிடலும் மருமகனிடமும் தற்போது செல்லயியலாது 4 மாதம் அவகாசம் வேண்டும் என்று கேட்டோம். 15 நாட்கள் கழித்து அனுப்பிவைத்தேன். என் மகள் இறப்பதற்கு முன்நாளோ அல்லது அதற்கு முன்நாளோ என்று சரியாக ஞாபகம் இல்லை. என் மகள் எனக்கு போன் செய்து பணம், நகை கேட்டு கொடுமை படுத்துவதாக சொன்னார் நான் ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். 2 நாள் கழித்து ஏற்கனவே அறிமுகமான ரமேஷ் என்பவர் வேறு ஒரு

அலுவலாக என் மருமனுடைய ஊருக்கு வந்தவர் எனக்கு போன் செய்து நந்தினி தூக்குமாட்டிக்கொண்டார் என்ற விவரத்தை கூறினார். உடனடியாக நாங்கள் புதுசத்திரம் அரசு மருத்துவமனைக்கு சென்று விசாரிக்கும்போது மருத்துவர் நந்தினி இறந்துவிட்டதாக தெரிவித்தார். 2 ஆவது எதிரியிடம் கேட்டதற்கு எதனால் தூக்குமாட்டிக்கொண்டார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னார். அதற்கு பிறகு நந்தினியை சிதம்பரம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிதம்பரம் மருத்துவமனையில் DSP விசாரித்தார். DSP யும் எப்படி இறந்தார் என்று கேட்டார் அதை பற்றி எனக்கு தெரியாது எனக்கு நாயம் வேண்டும் என்று கேட்டேன். பிறகு புதுசத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் என் அண்ணன் மகன் வீரபத்ரன் எழுதினான் நான் கையெழுத்துபோட்டேன். அந்த புகார் அ.த.சா.ஆ. 1 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. கலெக்டர் ஆபிஸிலிருந்து அதிகாரி ஒருவர் வந்து விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> - எதிரியும் இறந்போன பெண்ணும் 8 வருடங்களாக காதலித்து வந்தார்கள் என்றால் சரி. அதற்கு பிறகு எதிரியின் பெற்றோர்கள் வந்து திருமணம் செய்துகொள்ள கேட்டார்கள் என்றால் சரி. நான் மருத்துவமனைக்கு செல்லும்போது மணி 1.45 இருக்கும். என்னுடன் என் மனைவி, என் இரு மகள்கள் என் அண்ணன் மகள் வீரபத்ரன் ஆகியோர் சென்றோம். அரை மணி நேரத்திற்குமேல் மருத்துவமனையில் இருந்தோம். புகாரில் என் அண்ணன் மகன் புதுசத்திரம் காவல் நிலையத்தில் மாலை 5.00 மணிக்குமேல் எழுதினார். இறந்துபோன பெண் B.E., படித்துள்ளார். மற்ற இரு மகள்கள் B.sc., படித்துள்ளார்கள். என்னுடைய புகாரில் நான் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. அன்று 29.09.2020. எதிரி D.EEE., டிப்லமோ படித்தவர். 2 ஆவது எதிரி எங்களிடம் பேசிய பிறகு நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் சரி. நிச்சயத்தார்த்தத்திற்கு மாப்பிளைக்கு ஒரு பவுன் செயினும், மோதிரமும் போட்டோம் அவர்களும் என் மகளுக்கு ஒரு பவுன் செயின் போட்டார் என்றால் சரி. திருமணத்திற்கு எதிரிதான் மண்டபம் ஏற்பாடு செய்து திருமணம் செலவுகளும் செய்தார் என்றால் சரி. என்னுடைய மகளின் திருமணத்திற்கு பத்திரிக்கையும் எதிரி வீட்டில்தான் அடித்துக்கொடுத்தார்கள் என்றால் சரி. திருமணத்திற்கு பட்டுப்புடவை எடுத்துக்கொடுத்தார்கள் என்றால் சரி. அந்த சமயத்தில் பணம் தட்டுப்பாடாக இருந்ததால் இரண்டரை பவுன் நகையும், ரூ.50,000 பணமும் கொடுத்து திருமண ஏற்பாடு செய்ய சொன்னார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும் அவர்கள் கொடுத்த நகையைதான் நான் அருவி வங்கியில் வைத்து திருமண செலவிற்காக கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. அவர்கள் கொடுத்த அந்த ரூ.50,000 பணத்தில்தான் கட்டில் மெத்தை

வாங்கினேன் என்றால் சரியல்ல. அடகு வைத்த சீட்டுகளை என் மகள் எடுத்து சென்றுவிட்டாள். திருமணம் செய்தபோது எதிரிகள் நகை எதுவும் வேண்டாம் பெண் கொடுத்தால் மட்டும்போதும் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. RDO விசாரணையில் இவ்வாறுதான் சொன்னேன் என்றால் சரியல்ல. திருமணமாகன பிறகு என் மகளும், மருமகனும் சென்னைக்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரி. என் மகளுக்கு போட்ட ஒரு பவுன் செயினை அடகு வைத்துவிட்டேன் என்றால் உண்மைதான். சென்னைக்கு சென்ற பிறகு தனி குடுத்தனம் செல்வதற்காக ஸ்டவ் ஒருன்று என் மகள் கேட்டால் என்றால் சரி நான் வாங்கி கொடுக்கவில்லை. அதனால் 2 ஆவது எதிரி அவருடைய நகையை வைத்து வீரபத்ரனிடம் பணம் கொடுத்து ஸ்டவ் வாங்கி வரும்படி சொன்னால் என்றால் அதுபற்றி தெரியாது. அதற்கு பிறகு என் அண்ணன் மகன் வீரபத்ரனுக்கு என் மகள் கடனாக இரண்டு முறை ரூ.10,000 மும் அரை பவுன் நகை கடனாக கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திருமணமான பிறகு என் மகள் பயன்படுத்திய செல்போனை நான் திரும்ப பெற்றுகொண்டேன் என்றால் சரிதான். இறப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பு தொடர்ந்து 15 நாட்கள் என் மகளும், மருமகனும் என் வீட்டில் தங்கியிருந்தார்கள் என்றால் சரி. அவ்வாறு தங்கியிருக்கும்போது அவர்கள் இருவரும் சந்தோஷமாகதான் இருந்தார்கள். அவர்கள் எங்கள் வீட்டில் இருக்கும்போது நான் எதிரி வீட்டில் காம்போன் கால் போடுவதற்கு மேற்பார்வை செய்தேன் என்றால் சரிதான். என் மகள் என் வீட்டில் இருக்கும்போது நான் அடகு வைத்திருந்த ஒரு பவுன் நகையை மீட்டுக்கொடுக்கும்படி கேட்டார் என்றால் சரி. நானும் பணம் இல்லை 4 மாதம் கழித்து மீட்டு தருகிறேன் என்று சொன்னேன் என்றால் சரி. அதனால் என் மகள் வருத்தத்தோடி வீட்டைவிட்டு சென்றுவிட்டாள் என்றால் என்றால் சரி. 29.06.2020 அன்று காலை எதிரியின் ஊரில் அதே தெருவில் வசிக்கும் என்னுடைய உறவினரான தண்டபானியுடைய இறப்பிற்கு சென்றிருந்தேன் என்றால் சரி. இறப்பிற்கு என்னுடைய அண்ணன் மகன் வீரபத்ரன் மற்றும் உறவினர்கள் 2 ஆவது எதிரியும் வந்திருந்தார்கள் என்றால் சரி. வீரபத்ரன் இறப்பிற்கு சென்ற சமயத்தில் இடைபட்ட நேரத்தில் நந்தினியை பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொல்லி அவர்கள் வீட்டிற்கு சென்றார் என்றால் முதலில் தெரியாது என்று சொல்லிவிட்டு பிறகு என்னுடன்தான் இருந்தார் என்று சாட்சி சொன்னார். வீரபத்ரன் என்பவர் இருசக்கர வாகனம் எடுத்துசென்று நந்தினியை பார்க்க சென்றார் என்றும் அப்போது விரபத்ரனிடம் தன்னிடம் வாங்கிய ரூ.20,000 பணமும் அரை பவுன் நகையும் திரும்ப தரும்படி வர்புறுத்தினார் என்றும் அதற்கு தற்போது தரமுடியாது என்று வீரபத்ரன் சொன்னார் என்றும் அவர்கள் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு வீரபத்ரன் கோபமாக வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டார் என்றும் அதனால் நந்தினி வீரபத்ரனும் வாங்கி பணத்தை தரவில்லை என்றும்

அப்பா அடகு வைத்து நகையை மீட்டுக்கொடுக்கவில்லை என்ற வருத்ததில் தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரியல்ல. இரண்டரை சவரன் நகை மற்றும் பணம் ரூ.50,000 கொடுத்ததை எங்கள் ஊர் பெயரியவர்களான வீரசுந்தரம் மற்றும் ராதாகிருஷ்ணனுக்கு தெரியும் என்றால் சரியல்ல. வீரசுந்தரம் திருமணத்திற்கு வந்துள்ளார். ராதாகிருஷ்ணன் யார் என்று தெரியவில்லை. என்னை கலெக்டர் ஆபிஸ் அதிகாரி மறுநாள் விசாரித்தனர் நான் சொல்ல சொல்ல எழுதிகொண்டார்கள். எங்கள் ஐவரிடமும் தனித்தனியாக விசாரித்து எழுதிக்கொண்டார்கள். RDO விசாரிக்கும்போது 10 பவுன் நகையும், 50,000 2 ஆவது எதிரி கேட்டதாக சொன்னேனா என்றால் சொன்னேன். 15 நாட்கள் என் மகளும் மருமகனும எங்கள் வீட்டில் தங்கியிருந்தபோது 10 பவுன் நகையும், 50,000 2 ஆவது எதிரி கேட்டதாக சொன்னேனா என்றால் சொல்லவில்லை. என் மகள் இறந்துபோன முன்னால் எனக்கு கைபேசியில் தன்னை டார்ச்சல் செய்கிறார்கள் என்று என்னிடம் சொன்னதாக சொல்லும் விவரத்தை RDO விடம் சொன்னேனா என்றால் இல்லை. மருத்துவமனையில் எதிரியுடைய சகோதரன் வீரபத்ரன் என் அண்ணியிடம் தகராறு செய்தீர்கள் என்று சண்டைபோட்டு அதனால்தான் தற்கொலை செய்துகொண்டார் என்று கேட்டார் என்றால் தெரியாது. நானும் வீரபத்ரனும் ஒன்றாக சேர்ந்து கலந்து ஆலோசனை செய்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் எப்போது என்னிடம் அல்லது என் மகளிடம் நகை, பணம் கேட்டு கொடுமை படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. வீரபத்ரனை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்றேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>- இல்லை.

<u>மகிளா நீதிமன்றம், கடலூர்</u>

அமர்வு வழக்கு எண் : **9/2021**

அரசுதரப்பு **2** -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கீதா | வயது | 53 |
| கணவர் பெயர் | பாவாடை சாமி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சின்னாண்டிகுழி | சமயம் | 01.05 P.M |
| தாலூக்கா | கடலூர் | தேதி | 18.07.2024 |
| மாவட்டம் | கடலூர் | | |

சட்டம் **44/1969-**ன் விதிமுறைகளின்படி சாட்சிக்கு **18.07.2024 -**ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது. **(** எதிரிகள் ஆஜர் **)**

<u>பிரதம விசாரணை</u> **-** நான் மேற்கண்ட விலசாத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரியின் வீட்டிற்கு எதிர் வீடு. அவருக்கு திருமணமாகிவிட்டது. திருமணத்திற்கு நான் செல்லவில்லை என் மகன் சென்றான். 27.06.2020 அன்று என்னுடைய மகளுக்கு குழந்தை பிறந்திருந்தது. 2 நாள் கழித்து 29.06.2020 அன்று எதிரி வீட்டில் சத்தம் கேட்டதாக சொல்லி ஊர் மக்கள் ஓடினார்கள் என்ன என்று பார்த்தபோது நந்தினியை உக்காரவைத்து கை, கால்களை தேய்த்துக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்தவர்களை விசாரித்தபோது அவர்கள் தூக்குமாட்டிக்கொண்டதாக சொன்னார்கள். அதன்பிறகு நான் என் பேத்தி பிறந்திருந்ததால் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> - என்னை பெண் போலீசார் விசாரித்தாரா என்றால் இல்லை ஆண் போலீசார் விசாரித்தார்.

<u>மறுவிசாரணை</u>- இல்லை.